1996 பிப்ரவரி 15]

போடு என்கிற பழமொழியும் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிறது. அந்த அடிப்படையிலே கோஷா பெண்களே அந்த வங்கிகளுக்குச் சென்று அவர்களுடைய லேவாதேவிகளைச் செய்து கொள்ள வேண்டும் என்கிற அடிப்படையில் கோஷா பெண்களுக்கு என்று ஆங்காங்கே பெண்களே நடத்தும் வங்கிகளை இன்றைக்குத் திறக்க இயலாது. ஆனால், பெண்களே நடத்துகின்ற வங்கிகளிலே கோஷா பெண்கள் சென்று தங்களுடைய லேவாதேவிகளைச் செய்து கொள்வதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. அப்படி இருக்கிற நேரத்தில் அதிகமாக கோஷா பெண்கள் இருக்கின்ற பகுதிகளில் நூற்றுக்கு அறுபது விழுக்காடு அல்லது எழுபது விழுக்காடு இருக்கின்ற பகுதிகளில் மட்டும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைக் கருத்திற்கொண்டு அந்தப் பகுதிகளிலே பெண்களே நடத்தும் வங்கிக் கூட்டுறவுக் கிளைகளைத் திறக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 16, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

16--

மாடுகள் வாங்க மானியம்

21474--டாக்டர் எம். கருப்புசாமி:***

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குன்னூர் தொகுதியில் ஆதி திராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்குக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாக உயர் ரக மாடுகள் வாங்குவதற்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குன்னூர் தொகுதியில் ஆதிதிராவிடர் வகுப்பினருக்கு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாக உயர் ரக மாடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994 மற்றும் 1995-ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட

மாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு? அதனுடைய தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 மற்றும் 1994-95-ஆம் ஆண்டுகளில் சங்கங்களுக்குத் தக்க அறிவிப்புச் செய்து, விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுடைய சான்றிதழ் அடிப்படையில் நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் மொத்தம் 42 விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. கடன் வழங்குவதற்கான அறிவிப்பு செய்தவுடன் அவர்களுக்கு உடனடியாக கறவை மாடுகள் வாங்குவதற்கு மான்யம் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

17--

மீனவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை

*10201--திரு. ஆர். கோடிமாரி:

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழக கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் போது தமிழக எல்லையிலேயே இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை தனியே சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பொதுவாக இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கும்போது, காற்றின் திசை மாற்றத்தினால் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற் பகுதிக்குள் தவறிச் செல்ல நேரிடுகிறது. இதனால் இலங்கைக் கடற்படையினராலும், சில இலங்கை தீவிரவாத அமைப்புகளைச் சார்ந்தவர்களாலும் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். இந்திய